மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, அதற்காகத்தான் உள்ளூர் முக்கியஸ்தர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பெரியார் மாவட்டத்தில் இருக்கக் கூடிய மருத்துவ அலுவலரோடு தொடர்பு கொண்டு வருகிறார்கள். மேலும் மருத்துவ மனை கட்டுவதற்காக மருத்துவக் கட்டிடக் குழு மூலம் 25,000 ரூபாய் நன்கொடை வசூல் செய்திருக்கிறோம். இன்னும் 25,000 ரூபாய் வசூல் செய்யலாம் என்று எதிர்பார்க்கிறோம். கட்டிடம் கட்டுவதற்கு தகுதி வாய்ந்த நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, மருத்துவத் துறை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டவுடன், மருத்துவமனை கட்டுவதற்கான செயற்குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

விளாத்திகுளம் வழியாக விரைவுப் பேருந்துகள்.

*வினா எண். 239—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னையில் இருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழக துரித வண்டிகளில் சிலவற்றை விளாத்திக்குளம், நாகலாபுரம், புதூர் வழியாக திருப்பி விடும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 10-00].

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, முன்பே சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்போதும் இந்த அவையின் வாயிலாகவும், நேரடியாகவும், என்னுடைய தொகுதி வழியாக

சென்னையிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்கின்ற திருவள்ளுவர் பேருந்தை என் தொகுதி வழியாக விட வேண்டும் என்று கேட்டிருந்தேன். அப்போது கூடிய விரைவில் விடுகிறோம் என்று சொன்னார்கள். அப்போது 3 மாத காலத்திற்குள் பஸ் விடப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது ஏறத்தாழ 3 ஆண்டுகள் ஆகி விட்டன. ஆகவே இப்போதாவது சென்னையிலிருந்து தூத்துக்குடி செல்கின்ற அந்த விரைவுப் பேருந்தை என்னுடைய தொகுதியின் வழியாக விடுவதற்கு மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் நல்லெண்ணமாக இருந்தாலும் சென்னையிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்கின்ற பேருந்தை விளாத்திகுளம் வழியாக விடுவது என்றால் 14 கிலோ மீட்டர் அதிகமாக அப்பேருந்து செல்ல வேண்டி இருக்கிறது. அப்படிச் செல்வதை நீண்ட தூரப் பயணிகள் விரும்ப மாட்டார்கள். ஆகவேதான் அதைச் செய்யாமல் இருக்கிறோம். ஆனால் புதிதாக அங்கே பேருந்து விடப்படுவது பற்றிச் சொல்லவில்லை. அப்படிப் புதிதாக பேருந்து விடப்படுவது குறித்து கேட்டிருந்தால் அதற்குப் பொருத்தமான பதில் கொடுக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பு தனியாகப் பேருந்து கேட்டேன். அப்படி கேட்கின்றபோதுதான் சென்னையிலிருந்து—தூத்துக்குடிக்குச் எட்டையாபுரம் வழியாகச் செல்கின்ற பேருந்தை மாற்றி விளாத்திகுளம் வழியாக விடப்படும் என்றும் அதை அரசு ஆலோசிக்கும் என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். இருந்தபோதிலும் அங்குள்ள மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையாக இருப்பது புதிதாக ஒரு திருவள்ளுவர் பேருந்தை சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கு விளாத்திகுளம் வழியாக விடப்பட வேண்டும் என்பது. அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்கள், எட்டையாபுரம் வழியாகச் செல்கிறது என்று. எட்டையாபுரத்திற்கும் விளாத்திகுளத்திற்கும் உள்ள தூரம் 20 கிலோ மீட்டர் தான். அந்த 20 கிலோ மீட்டர் தூரத்தில் எட்டையாபுரம் வருவதற்கு நகரப் பேருந்துகள் நிச்சயமாகக் கொடுக்கப்படும். அந்தப் பேருந்துகளைப் பயன்படுத்திக் கொண்டு எட்டையாபுரத்திற்கு வந்து விரைவுப் பேருந்தைப் பிடிப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே உள் பக்கமாக இருக்கின்ற ஒவ்வொரு கிராமம் வழியாகவும் விரைவுப் பேருந்து செல்வது என்றால் அது நகரப் பேருந்து போல ஆகிவிடக் கூடும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்

அவர்களின் எண்ணத்தைக் கவனத்தில் கொண்டு பரிசீலனை செய்து தேவையானதைச் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடி துறைமுகம்

*வினா எண். 240—திரு. து. புருஷோத்தமன் : திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கின்ற சொரணம் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :—

தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்துவதுபற்றி மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :— இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, இந்தத் துறைமுகத்தை விரிவுபடுத்தினால் தூத்துக்குடி ஒரு தலைசிறந்த தொழில் நகரமாக வருவதற்குரிய வாய்ப்பு ஏற்படும். ஆகவே மத்திய அரசை மாநில அரசு இத்துறைமுகத்தை விரிவுபடுத்துவது குறித்து வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன். தூத்துக்குடி துறைமுகத்தில் தற்போது ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்ற சரக்கு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, எவ்வளவு சரக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்றன என்ற தகவல் இல்லை. ஆனால் துறைமுகத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் தூத்துக்குடி துறைமுக வளர்ச்சி வாரியம் என்று ஒரு புதிய வாரியமே அமைக்கப்பட்டிருக்கின்றது. அதிலே மாநில அரசு அதிகாரிகளும், மத்திய அரசு அதிகாரிகளும் உறுப்பினர்களாக இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய கூட்டம் பல முறை நடந்திருக்கின்றது. மீண்டும் அந்தக் கூட்டத்தை நடத்த இருக்கிறார்கள். அக்கூட்டம் முடிந்த பிறகு அது குறித்த தகவலை மத்திய அரசுக்கு அனுப்பி இதிலே திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசின் மூலம் சொல்வதாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS